# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 0004/ந/2017

ஆணை எண். 124/2017

நாள் : 20/05/2017

11.01.2017 நாளைய
தினகரன் நாளிதழ் செய்தி

– இம்முறைமன்ற நடுவத்தால் தாமாக முன்வந்து முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையர்,
திருத்தணி நகராட்சி.

– எதிர் மனுதாரர்

## ஆணை

11.01.2017 அன்று 'தினகரன்' நாளிதழில் "சொத்துவரி பெயர் மாற்றத்துக்கு வருவாய் உதவியாளர் (திருத்தணி நகராட்சி) லஞ்சம் வாங்கியதால் கைது செய்யப்பட்டது" குறித்து வரப்பெற்ற செய்தியின் அடிப்படையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7ல் உள்ள அதிகாரங்களின்படி, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாகப் பதிவு செய்தது. மேலும், மேற்படி செய்தியின் கடைசி பத்தியில் உயர் அலுவலர்களுக்கு வழங்குவதற்காக லஞ்சம் பெறப்படுவதாக திருத்தணி நகராட்சி ஊழியர்கள் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது குறித்தும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு திருத்தணி நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்.0004/2017/ந, நாள் 12.01.2017ல் ஆணையிடப்பட்டது.

அதன்படி திருத்தணி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.118/2017/சி1, நாள் 27.01.2017 வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. அவ்வறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

> *"திருத்தணி நகராட்சியில் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு ப. சுந்தர் என்பவர் பணியில் இருந்தபொழுது 10.01.2017 அன்று மாலை 4.00 மணியளவில் அலுவலக நேரத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, காஞ்சிபுரம் அவர்களால் கைது செய்யப்பட்டு, மாலை 7.20 மணியளவில் இந்நகராட்சி அலுவலகத்திலிருந்து காவல் துறை வாகனத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்க அழைத்து செல்லப்பட்டார்.*

மேலும், லஞ்ச ஒழிப்பு துறையினால் மேற்படி பணியாளர் கைது செய்யப்பட்ட விவரம் 10.01.2017ம் தேதியில் தினகரன் நாளிதழில் வெளியிடப்பட்ட பிறிதொரு செய்தி குறித்து, இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.118/2017/சி1, நாள் 24.01.2017ன் படி அனைத்து பணியாளர்களிடமும் விசாரணை செய்யப்பட்டது. இந்நகராட்சியில் நகராட்சி பணியாளர்கள் யாரும் எவ்வித பத்திரிக்கை நிருபர்களுக்கும் செய்திகள் ஏதும் கூறவில்லை என எழுத்து மூலமாக தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் கடைசி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது."

மேலும் 03.05.2017 அன்று நேரில் ஆஜரான திருத்தணி நகராட்சி ஆணையர் திரு. முருகேசன் மேற்குறிப்பிட்ட தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையினையும், விவரங்களையும் உறுதிசெய்து தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

நகராட்சி ஆணையரது விளக்க அறிக்கை ஏற்கப்படுகிறது. மேலும், இப்பொருள் தொடர்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிலிருந்து வரப்பெறும் நடவடிக்கை விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டுமென வலியுறுத்தி அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 20–ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

30/5/17

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
திருத்தணி நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.

நகல்

1. நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநரகம்,
செங்கல்பட்டு (சி) தாம்பரம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.